
# திராவிடத்தால் வாழ்கிறோம்

902

எழுத்து: கோவி.லெனின்

ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## இது பெரியார் மண்

ர.பிரகாசு

19

பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.

# உருவானது ‘விடுதலை புரம்’!

1958-ஆம் ஆண்டுவாக்கில், தன் தந்தையோடு நடுக்காட்டில் குடியேறிவிட்ட தங்கவேலன், அந்தப் பகுதிக்கு, பெரியாரை அழைத்து பெயர் வைக்க விரும்பினார். ஆனால், காமராசர் மீது பெரியார் தீவிரப் பற்றுக் கொண்டிருந்த காலம் அது என்பதால், பெரியாரிடம் பெயர் கேட்டால் காமராசரின் பெயரையே வைத்துவிடுவாரோ என்ற எண்ணம் தங்கவேலனுக்கு இருந்தது. அதனால், விடுதலைபுரம், சுயமரியாதைபுரம் என்று இரண்டு பெயர்களை எழுதி, அருகாமை பகுதியில் இருந்த படித்த சிலரிடம் கேட்டுள்ளார். அதில் பலரும் **‘விடுதலைபுரம்’** என்ற பெயரைச் சொல்ல, அதையே ஊரின் பெயராக வைக்க முடிவு செய்தார்.

அந்தக் காலகட்டத்தில்தான் 10.06.1964 அன்று அருகே உள்ள பெருவளப்பூருக்கு வருகை தந்தார் தந்தை பெரியார். மூடநம்பிக்கை ஒழிப்பு ஊர்வலமும் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. அப்போது, மேடையில் பெரியாருக்கு எடைக்கு எடை மிளகாய் வழங்கப்பட்டது. அந்த நிகழ்ச்சிக்குச் சென்று பெரியாரைச் சந்தித்த தங்கவேலன், “எங்கள் குடியிருப்புப் பகுதி வழியாகத்தான் நீங்கள் திரும்பச் செல்ல வேண்டும். செல்லும்போது, ஊர்ப் பெயர்ப்பலகையைத் திறக்க வேண்டும்” என வேண்டுகோள் விடுத்தார். அதேபோல திரும்பும் வழியில்,




அங்கே நின்று, பெயர்ப் பலகையைத் திறந்து வைத்த பெரியார் சுற்றிச் சுற்றிப் பார்த்தார்.

‘என்னங்க அய்யா ரெண்டு மூணு வீடுதான் இருக்குது. ‘விடுதலை புரம்’ என்று பேர் வைத்துவிட்டீர்களே, ஊராகி விடுமா?’ என்று கேட்டுள்ளார் பெரியார். ‘நான் ஊர் ஆக்கி விடுவேன் ஐயா’ என்று உறுதி அளித்தார் தங்கவேலன்.



விடுதலைபுரம் சட்டதிட்ட கல்வெட்டு!

*** விடுதலைபுரத்தில் எக்காலத்திலும் கோயிலோ, மசூதியோ, தேவாலயமோ கட்டக்கூடாது.**

*** சாதி-மத வேறுபாடுகளைக் கடைபிடிக்கக் கூடாது. * மதக்குறியீடுகளை அணிதல் கூடாது.**

*** ஒருவரையொருவர் அடிமைப்படுத்தி வாழக்கூடாது.**

என்பன உள்ளிட்ட 11 சட்டதிட்டங்களை வகுத்து, கல்வெட்டு ஒன்றையும் நிறுவினார். அந்தக் கல்வெட்டும், கட்டுப்பாடுகளும் இன்றும் அப்படியே இருக்கின்றன.

இந்தக் கட்டுப்பாடுகளை ஏற்றுக்கொண்டு வருவோர், விடுதலைபுரத்தில் குடியேறலாம் என அழைத்தார் தங்கவேலன். அப்படி வருவோருக்கு வீடுகளை அமைத்துத் தருவதையும் தன்னுடைய கடமையாகக் கருதினார். இந்தச் சூழலில்தான் 1970-ஆம் ஆண்டில் குடிசை மாற்று வாரியத்தையும், 1974-ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தையும் (தாட்கோ) நிறுவினார் கலைஞர். இவற்றின் மூலம் தங்கள் ஊரில் குடியிருப்புகளை ஏற்படுத்திட, உள்ளூர் நிர்வாகம் முதல் மாவட்ட நிர்வாகம் வரை முட்டி மோதிப் பார்த்தார் தங்கவேலன்.

முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படாததால், நேராக சென்னை புறப்பட்டு அன்னை மணியம்மையாரைச் சந்தித்தார். ஆசிரியர் கி.வீரமணியுடன் சென்று முதல் அமைச்சர் கலைஞரைச் சந்திக்க அறிவுறுத்தினார் மணியம்மையார். கோபாலபுரம் இல்லத்திற்குச் சென்று கலைஞரைச் சந்தித்தனர். விடுதலை புரத்தின் வரலாற்றை அறிந்தவுடன் அகமகிழ்ச்சி அடைந்த கலைஞர், மாவட்ட ஆட்சியரைத் தொடர்பு கொண்டு உடனடியாக குடியிருப்புகள் ஏற்படுத்தித் தர ஆணையிட்டார்.

தங்கவேலன் ஊருக்குச் செல்வதற்கு முன்பாக, அரசு நிர்வாகம் விடுதலைபுரத்தில் இருந்தது. விறுவிறுவென 35 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டன. ஊர்ப்பெயரை பெரியார் திறந்துவைத்தது போல, குடியிருப்புகளை கலைஞர் திறந்துவைக்க வேண்டுமென விரும்பினார் தங்கவேலன். 35 குடியிருப்புகளுக்காக கலைஞரை அழைத்து வர வேண்டுமா என உள்ளூர் தி.மு.க. நிர்வாகிகளுக்குத் தயக்கம். ஆனாலும் கலைஞருக்காகக் காத்திருந்தது விடுதலைபுரம்...

**...பயணிப்போம்.**

## புத்தகத் தூதுவர் மூலம் இளையோர் நூலகம்!



பள்ளி மாணவர்கள் மத்தியில், வாசிப்பை ஊக்குவிக்கும் வகையில், சீர் வாசகர் வட்ட அமைப்பு ‘புத்தகத் தூதுவர்’ என்கிற புதிய முன்னெடுப்பினைத் தொடங்கியுள்ளது. இந்த முயற்சியின் மூலம் அடுத்த ஐந்து ஆண்டுகளில், ஒரு லட்சம் மாணவர்களின் இல்லங்களில் ‘இளையோர் நூலகம்’ அமைப்பதற்கு இலக்கு வைத்துள்ளது. இந்தத் திட்டத்தினை திருச்சி, திருவெறும்பூர் அருகே காட்டூர் அரசினர் ஆதி திராவிடர் மகளிர் மேல்நிலைப் பள்ளியில், மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

அரசுப்பள்ளி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 6-ஆம் வகுப்பு முதல் 10-ஆம் வகுப்பு வரை உள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப, ஆண்டுக்கு 10 நூல்களைப் புத்தகத் தூதுவர் தனது சொந்தப் பொறுப்பில் வழங்க வேண்டும். இதன்மூலம் 5 ஆண்டுகளில் மாணவர்கள் 50 நூல்களைச் சேகரித்திருப்பர். இதற்காகவே சீர் வாசகர் வட்டம் மாதந்தோறும் ஒரு சிறந்த புத்தகத்தை 10 ரூபாய் விலையில் வெளியிடவுள்ளது. இந்த நூல்கள் இலக்கியம், சிறார் இலக்கியம், வரலாறு, அறிவியல், சூழலியல், மருத்துவம் போன்ற வகைமைகளில் இருக்கும்.

நூல்களைக் கொடுப்பதோடு மட்டுமில்லாமல் மாதத்துக்கு ஒருமுறை அந்த நூல் குறித்து, கலந்துரையாடுவதற்கும் கேட்டுக்கொண்டுள்ளது.

புத்தகத் தூதுவராக மாணவர்களுக்கு நூல்கள் அளிக்க முன்வருபவர் 200 பேர் படிக்கும் பள்ளியைத் தேர்ந்தெடுத்தால், மாதத்துக்கு 200 பிரதிகளை அளிக்க வேண்டும். ஒருவரோ அல்லது இரண்டு மூன்று நண்பர்களோ இணைந்து, இந்தப் பணியை மேற்கொள்ளலாம் என்றும் கேட்டுக்கொண்டுள்ளது.

வாசிப்பு இயக்கம் வளரட்டும்!

## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

69

``கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்...''



# பதறுகிறார்கள், பதற்றத்தில் கதறுகிறார்கள்...

**செல்போன் எண் வாங்குவதற்காகத்தான் ‘உங்களுடன் ஸ்டாலின்’ என்கிற திட்டத்தை, தி.மு.க. அரசு நடத்துகிறது என்றும், 2021-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பே மக்களிடம் வாங்கிய மனுக்களை முதலமைச்சர் கண்டுகொள்ளவில்லை என்றும், எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி குற்றம்சாட்டுகிறாரே?**

எடப்பாடி பழனிசாமியின் பிரச்சாரத்தை தமிழ்நாட்டு மக்கள் கண்டுகொள்ளவில்லை, அவருடைய கட்சித் தொண்டர்களே கண்டுகொள்ளவில்லை, அவருடைய ஆட்சியில் கொள்ளையடித்த கட்சி நிர்வாகிகள், செலவு செய்து ஆள் சேர்த்து, கூட்டத்தைக் காட்டுகிறார்கள் என்பதை உணர்ந்ததால், தி.மு.க. அரசு மீது பாய்கிறார் எடப்பாடி பழனிசாமி. 2021-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலுக்கு முன் ‘உங்கள் தொகுதியில் ஸ்டாலின்’ என்ற பெயரில் இன்றைய முதலமைச்சர் அவர்கள், ஆட்சிக்கு வந்ததும் மக்களிடமிருந்து நேரடியாகப் பெற்ற மனுக்களின் மீது நடவடிக்கை எடுப்பதற்காக ‘முதல்வரின் முகவரி’ என்ற துறையை உருவாக்கியும், ‘மக்களுடன் முதல்வர்’ திட்டம் வாயிலாகவும் கடந்த நான்காண்டுகளில் ஒரு கோடி மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டிருக்கின்றது. திராவிட மாடல் ஆட்சியில் பல திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதால், அந்தத் திட்டங்களில் தாங்களும் பயன்பெற வேண்டும் என விரும்புகிற மக்கள், அதற்குரிய தகுதி படைத்தவர்களாக இருந்தால், எளிதாக விண்ணப்பித்து, விரைவாகப் பயன் பெறுவதற்காகத்தான் ‘உங்களுடன் ஸ்டாலின்’ என்கிற மக்களைத் தேடி அதிகாரிகள் செல்லக்கூடிய சிறப்பான செயல்பாடு ஜூலை 15 அன்று சிதம்பரத்தில் முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்டுள்ளது.

> **‘உங்களுடன் ஸ்டாலின்’ என்கிற தமிழ்நாடு தழுவிய 10 ஆயிரம் முகாம்கள் மூலம் மேலும் பல மகளிர், இந்த உரிமைத் தொகையைப் பெறவிருக்கிறார்கள்.**

கொடுத்த மனுக்களின் நிலை என்ன, அதன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன, எந்தத் தேதியில் தங்களுக்குரிய பலன்களைப் பெறமுடியும் என்பன உள்ளிட்ட குறுஞ்செய்திகளைப் பயனாளிகளுக்கு அனுப்புவதற்காகத்தான் செல்போன் நம்பர்கள் பெறப்படுகின்றன. மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தின் தற்போதைய ஒரு கோடியே 16 இலட்சம் பயனாளிகளும் மாதந்தோறும் தங்கள் வங்கிக்கணக்கில் ஆயிரம் ரூபாய் பணம் சேர்ந்திருப்பதை, செல்போனில் வருகின்ற குறுஞ்செய்தி மூலமாகத்தான் அறிந்துகொள்கிறார்கள். ‘உங்களுடன் ஸ்டாலின்’ என்கிற தமிழ்நாடு தழுவிய 10 ஆயிரம் முகாம்கள் மூலம் மேலும் பல மகளிர், இந்த உரிமைத் தொகையைப் பெறவிருக்கிறார்கள். அதுபோல, ஏறத்தாழ 15 லட்சம் பேர் ஏற்கெனவே வீட்டு மனைப் பட்டாக்களைப் பெற்றிருக்கிறார்கள். தற்போது, நடைபெறும் முகாம் மூலமாக மேலும் பல இலட்சம் பேர் பயனடைவார்கள். அரசின் திட்டங்களைப் பெற விரும்பும் மக்கள், நம்பிக்கையுடன் செல்போன் நம்பரைத் தருகிறார்கள். பயனடைந்த மக்கள் நன்றி மறவாமல் இருக்கிறார்கள். புதிதாகப் பயன் பெறும் தமிழ்நாட்டு மக்களும் அப்படித்தான் இருப்பார்கள் என்பது ‘பத்து தோல்வி’ பட்டம் பெற்றுள்ள எடப்பாடி பழனிசாமிக்குத் தெரியும். அதனால்தான் பதறுகிறார். பதற்றத்தில் கதறுகிறார்.

**...வினா தொடரும்.**

## ஃப்ளாஷ்பேக்



### பிறந்த நாளில் தலைவரின் வாழ்த்து!



அ.இளஞ்செழியன்

எனது பிறந்த நாள் அன்று, தானைத் தலைவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களிடம் வாழ்த்துப் பெற வேண்டும் என்கிற ஆசை, 2013-ஆம் ஆண்டு நிறைவேறியது. ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 18-ஆம் தேதி அன்று, இந்தப் புகைப் படத்தினைப் பார்த்து, இப்போதும் ஆனந்தம் கொள்வேன். தலைவரின் வாழ்த்து ஆண்டுகள் கடந்து, மனதில் உற்சாகம் கொள்ள வைக்கும். படத்தில் கழகத் துணைப்பொதுச் செயலாளர் ஆ.ராசா அவர்களும் கலைஞரின் செயலாளர் சண்முகநாதன் அவர்களும் உள்ளனர்.

**- அ.இளஞ்செழியன், இளைஞர் அணித் துணை அமைப்பாளர், மேட்டூர் நகரம், சேலம் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### மாஸ்டர் தாரா சிங் சந்திப்பு!

1958-ஆம் ஆண்டு பிப்ரவரி 3-ஆம் தேதி டெல்லியில் சீக்கியத் தலைவர் மாஸ்டர் தாரா சிங்கைக் கழக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.வெ.கி.சம்பத் சந்தித்தார். தனிநாடு கோரிக்கையைப் பேசி வந்த தாரா சிங், இந்து மதத்தில் நிலவிய மேலாதிக்க வெறியையும் வடநாட்டு இந்தி வெறியையும் எதிர்த்துப் போராடி வந்தார். அதனால், மாஸ்டர் தாரா சிங் - சம்பத் ஆகியோரின் சந்திப்பு அப்போதைய கால கட்டத்தில் பத்திரிகைகளில் பெரும் பரபரப்புச் செய்தியானது.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.